# துகிலிகை

காலாண்டு ஓவிய சஞ்சிகை

*Thuhilihai*

ஒக்டோபர் 2005

துளி – 1





வெளியீடு: யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

சித்திரக்கலைத்துறை

## ஏன் இந்தத் துகிலிகை?

கல்வியின் முக்கிய நோக்கம் சமநிலை ஆளுமையுள்ள மனிதர்களை உருவாக்குவதே!

சமூகத்திற்கு உகந்த மதிக்கக் கூடிய விழுமியப் பண்புகளைக் கொண்ட மனிதர்களை உருவாக்க வேண்டியதும் கல்வியினது நோக்கமாகவுள்ளது.

சமூகப்பிரச்சனைகள் பற்றி ஆழமான பார்வையும், அன்பு உணர்வும், ரசஞான உணர்வும் இன்று மாணவர்க்கு அவசியமாகவுள்ளது.

இயற்கையை ரசிக்கவும், சூழலை அழகாக்கவும், குரோதம், பகை, பழிவாங்கல்கள், நீங்கிய அனுதாப எண்ணங்களை வளர்க்கவும் வேண்டிய அவசியமும் இன்றுள்ளது.

அழகியல் கல்வியானது மேற்கூறிய சிந்தனைகளுக்கு அருமருந்தான களமாக அமைந்துள்ளது.

இதுதான் அத்துறைசார்ந்த தேடல்களும், வெளியீடுகளும் அவசியமாவதற்கு காரணமாகிறது.

சித்திரத்திற்கென நூல்கள் இல்லையே என்ற எண்ணம் நீக்கி வண்ண வடிவமாக இச் சஞ்சிகை உங்களோடு தொடர்ந்து வலம் வரவுள்ளது.

இச் சஞ்சிகையின் தேவையை உணர்ந்து இதன் வெளியீட்டுக்கு ஊக்குவித்து வழிகாட்டும் எமது கல்லூரிக் கமலம் - பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன், உபபீடாதிபதி திரு. பா. தனபாலன் மற்றும் அனைவருக்கும் சிரம் தாழ்ந்த நன்றிகள்.


உங்கள் அலோசனைகளையும், ஆக்கங்களையும் எழுதுங்கள்.

திரு. க. ரட்ணேஸ்வரன்
'துகிலிகை' ஆசிரியர்

எமது முகவரி:
'துகிலிகை'
சித்திரக்கலைத்துறை,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

பீடாதிபதி - கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்
அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரி சித்திரப் பாடத் துறையினர் இவ்வருடம் பேசும் தூரிகை எனும் கண்காட்சியையும், சித்திரப் பாடத்துறை சார்ந்த "துகிலிகை" சஞ்சிகையையும் வெளியிடுகின்றமையையிட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பாடசாலை மாணவரிடையே சித்திரப்பாடம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை எமது பிரதேசத்தில் நிலவுகின்றது.

சித்திரப் பாடத்துறையைச்சார்ந்த வெளியீடுகள் ஆக்கங்கள் போதுமானவையாக இல்லை. அதுவும் தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளில் இப்பாடத்துறை சார்ந்த ஆசிரியர் பற்றாக்குறை, ஆர்வமுள்ளோரை வழிப்படுத்த வளங்கள் இல்லாமை, போதிய அக்கறை காட்டப்படாமை போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றை இயலுமானவரை தீர்க்க எண்ணும் எம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரப்பாடத்துறையினரின் முயற்சிகளுக்கு என் ஆதரவையும் ஆசிகளையும் வழங்குகின்றேன். இதன் பொறுப்பு விரிவுரையாளர்கள் திரு. க. ரட்ணேஸ்வரன், திருமதி. பப்சி மரியதாசன், மற்றும் முகிழ்நிலை ஆசிரியர்களின் முயற்சிகளையும் பாராட்டுகின்றேன்.

## அழகியல் கலையின் அறிவியலாக ஓவியம்!



அழகியல் கலையின் அறிவியல் பாடமாகவே இன்று ஓவியக்கலை மிளிர்கின்றது. கல்வியியல் துறையின் சகல பரிமாணங்களிலும் ஓவியக் கலையின் கோடுகளும், வரைபுகளும், குறியீடுகளும், வண்ணங்களும், அடையாளங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. தொடர்பாடல் தேர்ச்சியின் அடிப்படைகளையும் ஓவியக்கலையே ஒப்புவிப்பதை கல்வியியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வகையில் ஓவியக்கலை ஒவ்வொரு மாணவர்களினதும், மனிதர்களினதும் உள ஆற்றலை, திறன்களைத் தேர்ச்சிகளை விருத்தியாக்குகின்றது.

இவ் விருத்தியை எமது பிரதேச மாணவர்களும் பெற்றுப் பயனுடைய வேண்டும் என அவாவுடன் சித்திரப்பாடத்துறை பொறுப்பு விரிவுரையாளர் திரு. க. ரட்ணேஸ்வரன் அவர்களும் விரிவுரையாளர் பப்சி மரியதாசன் அவர்களும், முகிழ்நிலை ஆசிரியரும் ஒன்றிணைந்து கண்காட்சியையும் மலர் வெளியீட்டையும் மேற்கொள்ளும் முயற்சி பாராட்டத்தக்கதும் - காலத்தின் தேவையாகவுள்ளது. இச் சஞ்சிகை தொடர்ச்சியாக காத்திரமான படைப்புக்களுடன் வெளிவர வேண்டும் என அவாவுறுகின்றேன். இறையருள் துணை நிற்பதாக.

பா. தனபாலன் (உபபீடாதிபதி – கல்வி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

# உணர்வுகளின் உயிரோட்டம்! – இரசனை பற்றிய ஓர் நோக்கு

ஆறறிவு படைத்த மனிதன், ஐம்புலன் களினூடே பெறுகின்ற உளத் திருப்தி நிலையே இரசனையாகும். இரசிக்கத் தெரியாதவன் வாழ்வில் கலையை அனுபவிக்கத் தெரியாதவனாகி விடுகிறான். கண்ணிருந்தும் குருடாய், காதிருந்தும் செவிடராய் வாழும் நிலைக்கு ஒப்பானது இரசனை உணர்வற்றவன் வாழ்வு இரசனை உணர்வானது மனித வாழ்விற்கு இறைவனால் உவந்தளிக்கப்பட்ட இன்ப நிலையாகும்.

எவனொருவன் தான் பெற்றுக் கொண்ட அனுபவத்தை அதன் சுவை குறைவுபடாத வகையில் ஏதாவதொரு கலைப்படைப்பினூடாக வழங்க முற்படுகின்றானோ அவன் கலைஞனாகிறான். அவனது படைப்பை பார்த்து அல்லது கேட்டு அதே விதமான இன்ப அனுபவத்தைப் பெறுபவன் இரசிகனாகிறான். இந்த இடத்திலே அக் கலைப்படைப்பு நிலைத்துவம் பெற்ற படைப்பாகிறது. இத்தகைய உன்னதமான இரசனை உணர்வைப் பெற மனிதனின் புலனுணர்வுகள் கூர்மையடைய வேண்டும். இதனை வழங்குவது பயிற்சியாகும் எனவே இரசனை உணர்வைப் பயிற்சியின் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும்.

இரசனை என்பது தமிழிலக்கியங்களின் நவரசங்களாகச் சித்தரிக்கப்படுகிறது. நகை, இழிவரல், அழுகை, வீரம், அச்சம், வியப்பு, கோபம், மருட்கை சிருங்காரம் என்ற ஒன்பது வகை உணர்வுகளும் வெளிப்படும் வகையில் படைக்கப்பட்ட இலக்கியங்கள் நாடகங்கள், கவிப்பூக்கள், சிற்பங்கள், சித்திரங்கள் என பண்டைத் தமிழிலக்கியங்களில் ஏராளமாய் விரிவிக் கிடக்கின்றன.

இரசனை அனுபவம் மூலம் ஒருவன் உள்ளம் சார்ந்த ஆன்மீகத் திருப்தியைப் பெற முடியும். மீண்டும் மீண்டும் பெறப்படும் இன்ப அனுபவ நிலையால் அவனது உணர்வுகள் சமநிலையடையும். உள்ளம் அமைதி கொள்ளும். செயற்பாடுகள் மென்மையானதாகவும் நேர்மையானதாகவும் மாற்றமடையும். எனவே இரசிகனிடத்தில் நேரிய மனப்பாங்கு விருத்தி பெறும்.

இரசனை உணர்வின் மூலம் ஒருவனது அவதானிக்கும் திறன் விருத்தியடையும் என்பதுடன் மனதை ஒரு முகப்படுத்தும் தியான நிலை உருப்பெறும். இதனால் நினைவாற்றல் அதிகரிப்பதுடன் படைப்பாற்றலும் வளர்ச்சி நிலையை அடையும் அறிவாற்றல், அனுபவம், பயிற்சி என்பவை இரசனை வளர்ச்சியில் இன்றியமையாய பண்புகள் ஆகும்.

இலங்கைப் பாடசாலைகளின் கலைத்திட்டத்தின் அழகியற் பாடங்களினூடாக எதிர்நோக்கப்படும் குறிக்கோள்களுள் பிரதானமானதாக அமைவது இரசனை விருத்தியாகும். தரம் 7 தொடக்கம் தரம் 11 வரையான இடைநிலை வகுப்புக்களின் சித்திரப்பாடக் கலைத் திட்டத்தில் நயத்தல் எனும் அலகு முக்கிய பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இவ் அலகினூடாக மாணவன் பாடசாலையுடன் தொடர்புபட்ட இயற்கைச் சூழலையும், செயற்கைச் சூழலையும் இரசிக்க தூண்டப்பட வேண்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. சிறுவர்களுக்கான தொடர்பு சாதனங்களுடாக வழங்கப்படும் நிகழ்ச்சிகளை இரசிக்க கற்றுக் கொள்ளுதல் எனும் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. அதே போல் வேறு அழகியல் பாடத்துடன் தொடர்புடைய ஆக்கங்களையும் தற்காலச் சித்திரங்களையும் நயக்கும் திறன் விருத்தி எதிர்பார்க்கப்படுகிறது. மாணவன் தனது பாடசாலை தான் வாழும் பிரதேசம், தனது நாடு சர்வதேசம் என்ற வகையில் இரசனை மட்டத்தை விரித்துச் செல்லக் கூடியதாக கலைத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் எமது துரதிஷ்ட நிலை என்னவெனில் பாடசாலைகளில் இவ்வலகு தொடர்பான கற்பித்தற் செயற்பாடுகள் குறைவான நிலையிலே உள்ளன என்பதாகும். இரசனை அனுபவத்தைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் பாடசாலை மட்டத்தில் மிகக் குறைவாகவே ஒழுங்கு செய்யப்படுகின்றன. அவையும் எந்தளவு வினைத்திறமையுடையதாக முடிவடைகின்றன என்பது கேள்விக் குறியேயாகும்.

எனவே, சித்திர பாடக் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்த வேண்டுமெனில் இரசனை உணர்வுடைய சித்திர ஆசிரியரும் பிரதான வளமாகக் காணப்படுவர். அத்தகைய ஆசிரியர்களின் கைகளிலேயே சித்திரப்பாடத்தில் ஒளிமயமான எதிர்காலம் தங்கியுள்ளது.

**திருமதி. பப்சி மரியதாசன்**
**துணை ஆசிரியர் - 'துகிலிகை'**



2005 அழகெழல் போட்டியில் வழங்கப்பட்ட பரிசில்களின் ஒரு தொகுதி

# தம்புள்ள குகை

இலங்கையிலுள்ள மிகப்பெரிய பௌத்த குகை விகாரையாக தம்புள்ள குகை கருதப்படுகின்றது. தரை மட்டத்திலிருந்து 500 அடிவரை உயர்ந்து இது காணப்படுகின்றது. இங்கு காணப்படுகின்ற 5 குகை விகாரைகளுள் மூன்று பழமை வாய்ந்தவை.

கி.மு. 89-76 இல் வலகம்பாகு மறைந்திருக்க இக்குகை பயன்படுத்தப்பட்டதென்றும். பின்னர் நிசங்க மல்லனால் திருத்தம் பெற்று ஒரு பொன் விக்கிரகம் அமைத்ததன் காரணமாக அக்குகைக் கோயில் பொன் மலைக் குகைக் கோயில் என்றும் அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

புத்த சரிதைகளும், வரலாற்றுச் செய்திகளும் இங்கே வரையப்பட்டுள்ளன. மகிந்ததேரரின் இலங்கை வருகை, விஜயனின் தரையிறக்கம், அனுராதபுரமிகிந்தலையின் புதையலைக் காட்டும் சித்திரம் சங்கமித்தா பிக்குணி புனித வெள்ளரசுக் கிளையைக் கொணர்தல், துட்டகெமுனு - எல்லாளன் யுத்தம், போதிசத்துவ சம்பவங்கள், பரிநிர்வாணம் அடைய அசுரனை அழைத்தமை, இறுதித் தானமேற்று மல்ல அரசனுக்கு உபதேசம் செய்தமை, பரிநிர்வாணம் எய்தியமை, புனித அஸ்தி பங்கிடப்பட்டமை என்பன சிறப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

முதலாவது குகையில் பல புத்தர் சிலைகள் காணப்படுவதுடன் வலகம்பாவின் சிலையும் காணப்படுகின்றது. இங்கு புத்தரின் 63 பெரிய சிலைகளும், 180 சிறு சிலைகளும் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது குகையில் புத்த உருவ ஓவியங்கள் அதிகமுள்ளன. இவற்றுடன் மூன்று நிலையிலுமுள்ள புத்தசிலைகளும் தனிக் குகை ஒன்றில் 47 அடி நீளமுள்ள அரிதுயில் செய்யும் புத்தசிலையும் காணப்படுகிறது.

அசுரரின் தோல்வியைக் காட்டும் சித்திரம் சிறப்பு மிக்கது. இதில் அரக்கர்களின் பயங்கரத் தோற்றத்தை தீவிரப் படுத்த பாம்பு, நாகம் போன்றவை அரக்கரின் தலைக்குப் பொருத்திக்காட்டப்பட்டுள்ளது.

















SRI LANKA


SRI LANKA


Dambulla
SRI LANKA


SRI LANKA


SRI LANKA


SRI LANKA


SRI LANKA


SRI LANKA

# வாழ இருக்கும் ஓவியங்கள்.....

ஒரே புலம்பலும் பற் கடிப்புகளும், பார்வை எல்லாம் சோகமாக இருக்கிறது. மகிழ்வோ, அழகுணர்வோ இங்கு தெரிவதாக இல்லை ஓவியங்கள் மனதிற்கு இதம் தர வேண்டும். அவற்றைப் பார்க்கும் போது அவை எம்மை எங்கோ ஓர் இன்பமான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்படி இருக்க ஓ... என ஒப்பாரி வைக்கும் வக்கிரமான இப்புலம்பல் ஓவியங்களின் தேவைகள் என்ன? இவை யாருக்காக வரையப்படுகின்றது? சமுகத்தை திருப்திப் படுத்தாத கலையின் அவசியம் என்ன?

இவை சமகால ஓவியக் காட்சிகளை பார்ப்பவர்களின் அங்கலாய்ப்பு. புறத்தே இருந்து பார்க்க ஒரு வேளை இவ் வினாக்கள் சரியாகத் தான் தோன்றும்.

இவை தெளிவின்மைகளால் எழும் வினாக்களே, ஓவியத்தின் ஊடாக நாட்டைத் திருத்துவதோ, மக்களைச் சீர்ப் படுத்துவதோ, உரிமைகளைப் பெறுவதோ, மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதோ என்பது சாத்தியம் அற்றது. இதில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. அவ்வாறு ஓர் எண்ணம் தோன்றினாலும் அது, சூடான பாறையில் விழுந்த பனித்துளியே' ஆனாலும், இவ் வேலைகளை ஒரு வேளை, நாடகமோ, பாட்டோ அல்லது இன்னும் ஓர் கலை வடிவமோ செய்து விட்டுப் போகலாம். ஓவியத்திற்கு என சில வேலைகள் இருக்கத் தான் செய்கின்றது. அவற்றை அது ஒரு புறம் இருந்து செய்யவே வேண்டும்.



இவ்வாறான தெளிவின்மைகளும் குறைகளும் எழக் காரணம் ஓவியம் ஒன்றைப் பார்ப்பது எப்படி எனும் தெளிவும், பழக்கமும் இன்மைகளுமே. தமிழ் படிக்கத் தெரிந்த எல்லோராலும் தமிழில் கவிதை படிக்க முடிவதில்லை, அரை, குறை சிங்களத்தில் கொழும்பு சென்று வரும் எம்மில் பலரைப் போலத்தான் இன்று ஓவிய காட்சிக் கூடத்தினுள் பெரும்பாலானோர் நுழைகின்றனர்.

ஓவியம் பற்றிய கற்றல்களோ தொடர்புகளோ இன்றி இருக்கும் சமூகத்தில் நூறு விகித வாசிப்பை எதிர் பார்க்க முடியாத நிலையும் உண்டு. இவ்வாறான பிற்போக்குள்ள கருத்துக்கள் எழ இதுவே வலுவான காரணமும் கூட.


ஹிரோசிமா, நாகசாகி நகர்களில் அணுகுண்டு வீசப்பட்ட செய்தி இன்று வரலாறாகி விட்ட பழங்கதை. அன்று அக்கொடூரத்தில் இருந்து எஞ்சியவர்கள் தங்கள் உணர்வுகளை ஓவியமாக்கினர். இவர்கள் ஓவியர்கள் அல்ல வலிகளைத் தாங்கியவர்கள். அவை "கன்வஸ்களில்" எண்ணெய் வர்ணம் கொண்டு வரையப்பட்டவை அல்ல. கிடைத்த காகிதங்களில் கிறுக்கித் தள்ளியவை. அவற்றை இன்று பார்த்து ஓ என்று ஒப்பாரி வைத்தவர்களில் நானும் ஒருவன்.

காரணம் அவை கண்களாலும் கைகளாலும் மூளையினாலும் வரையப்பட்டவை அல்ல. உணர்வுகளின் வலிகளாய் வரையப்பட்டவை ஆகையால் தான் 50 வருடங்களைத் தாண்டி பின்னரும் அக் கோடுகளுக்கு அர்த்தம் கிடைத்து இருக்கிறது. ஆனால், அன்று பார்க்க ஹிரோசிமா, நாகசாகி ஓவியங்களில் இருந்து வெறும் கோடுகள் மட்டுமின்றி அக் கோடுகள் ஏற்படுத்தும் அதிர்வுகளைப் பார்க்கிலும் அதிக வலியை அவர்கள் அனுபவித்து இருந்தனர்.

இதே நிலை தான் இங்கும் யுத்தம் பற்றிய, ஆழிப்பேரலை பற்றிய வலிகளை ஓவியங்கள் காட்டுவதைப் பாக்கிலும் அதிக வலிகளை தன்னகத்தே கொண்ட இவர்களுக்கு இவ் ஓவியங்கள் வெறுப்புணர்வையே ஏற்படுத்து கின்றது. இருப்பினும் இவ் ஓவியங்கள் நாளைய சமுகத்திற்கான சாட்சியும், ஆவணங்களும் ஆகும். அன்று வாழ மறுத்த ஓவியங்கள் இன்று வாழ்வதைப் போல, இன்று வாழ மறுக்கும் இவ் ஓவியங்கள் நாளை வாழும்.....

**எஸ். என். வாசன்**

## மாணவர் பக்கம்



**அழகெழல் 2005 நிகழ்வில் மாணவர்களால் படைக்கப்பட்ட ஓவியங்களை பீடாதிபதியும் சிறப்பு விருந்தினரும் (இலங்கை வங்கி மேற்தரக் கிளை முகாமையாளர் திரு. பாலசுப்பிரமணியம்) பார்வையிடுகின்றனர்.**

# படைப்பக்கமும் பார்வைக்களமும்

### சமாதான ஓவியக்கண்காட்சி

செப்ரெம்பர் 21ம் திகதி சர்வதேச சமாதானதினத்தை ஒட்டி சித்திரக் கண்காட்சி ஒன்றினை 10-15 வயதுக்குட்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லீம் பிள்ளைகளின் ஆக்கங்களைக் கொண்டு நடாத்தப்பட்டது.

சமாதான செயற்பாட்டை கூட்டினைப் பதற்கான செயலகம் இதனைத் திட்டமிட்டுள்ளது. செப். 21, 22, 23 ஆம் திகதிகளில் கொழும்பு லயன்ஸ் வெண்ட் கலை அரங்கில் இக்கண்காட்சி நடைபெற்றது.

### சேது காண்பிய புகைபடக் கண்காட்சி

செப் 17 - 20 வரை சேது காண்பியத்தின் புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியில் தொல்லியல் கருவூலங் களையும், வாழ்க்கை, உழைப்பு, உறவுகள், குட்டி இளவரசி, கருவறை எனப் பல்வேறு காட்சிகளைச் சித்திரிக்கும் 45 புகைப்படங்கள் காட்சிப் படுத்தப்பட்டன.

புகைப்படக் கலைஞரும் தொல்லியல் துறையைச் சேர்ந்தவருமான ஜே. ஜெயதீஸ் என்பவரால் இது ஆக்கம் பெற்றது.

### தென்மராட்சி வலய மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி

தென்மராட்சி வலயப் பாடசாலை மாணவர்களின் ஆக்கப்பொருள் கண்காட்சி 21,22-09-2005 ஆகிய தினங்களில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி. றெ. இருதயநாதன் கலந்து கொண்டார்.

### ஓவியக் கண்காட்சி

யாழ். திருமறைக் கலாமன்றமும் - கொழும்பு விபவி ஓவியக் கலை வட்டமும் இணைந்து 23-09-2005, 24-09-2005 அன்று ஓவியக் கண்காட்சி ஒன்றினை யாழ் றக்கா வீதி கலா முற்றத்தில் நடாத்தியது. இதில் ஒருநாள் ஓவிய பயிலரங்கும் நடாத்தப்பட்டது.

### சுகாதார அமைச்சின் சுவரொட்டிப் போட்டி

சுகாதார அமைச்சின் தேசிய எய்ட்ஸ் தடுப்புப்பிரிவு சுவரொட்டிப் போட்டி ஒன்றை தேசிய ரீதியில் கடந்த செப்ரெம்பரில் நடாத்தியது. இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கு இரு பிரிவாக நடாத்தப்பட்டது.

### 'பேசும் தூரிகை' ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரக்கலைத்துறையினரால் ஒழுங்கு செய்யப்படும் மேற்படி கண்காட்சி ஒக்டோபர் 07, 08, 09 ஆம் திகதிகளில் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றது. சித்திரக்கலை கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு பிரயோசனமான முறையில் இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறையின் "அழகெழல்"




யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறையினரால் நடாத்தப்படுகின்ற "அழகெழல்" இவ்வாண்டும் யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சியிலும் தடம்பதித்திருக்கின்றது. மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களிடையேயும் அழகியல் விருத்தி கருதி சிற்ப ஆக்கம், சித்திரம் ஆகிய போட்டிகளும் நடாத்தப்பட்டன. போட்டிகளிலே சித்திரம், சிற்பம், இசை, அபிநயப்பாடல், உழவர் நடனம், தனிநடனம், சிறுவர் நாடகம், தனிநடிப்பு ஆகிய போட்டிகள் தரம் 4 தொடக்கம் உயர்தரம் வரை ஒவ்வொரு பிரிவுகளாக நடாத்தப்பட்டது.

சித்திரப்போட்டி – பிரிவு I இல் – தரம் 4, 5 மாணவர்களும் பிரிவு II இல் தரம் 6,7,8 மாணவர்களும், பிரிவு III இல் தரம் 9,10,11 மாணவர்களும், பிரிவு IV இல் உயர்தர மாணவர்களும் சுமார் 1500 மாணவர்கள் இதில் கலந்து சிறப்பித்தனர்.

தனி இசையிலும், தனி நடனத்திலும் 6,7,8 மாணவர்களும் அபிநயப்பாடலிலும், உழவர் நடனத்திலும், சிறுவர் நாடகத்திலும் தரம் 4,5 ஐ சேர்ந்த சுமார் 1500 மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பணப்பரிசில்களும், கேடயங்களும், சான்றிதழ்களும், தேர்ச்சியடைந்த சகல மாணவர்களுக்கும் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

நிகழ்வுகள் போட்டிகளாக நடாத்தப்படினும் அழகியல் கல்வியின் அவசியத்தையும் தேவையையும் உணர்த்தும் வகையிலேயே ஒழுங்கமைக்கப்பட்ட தென்பது யாவருக்கும் உணர்த்தப்பட்டது. நிகழ்வில் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா பங்கேற்றார்.

இப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வுகள் 07 – 05 – 2005 சனிக்கிழமை கல்லூரியின் கமலக் கலையரங்கில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்டத்திலும் முதன் முறையாக இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகள் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலைத்துறை கலைப்பரிமாணத்தின் மேலும் ஒரு படி நகர்ந்துள்ளமை சிறப்புக்குரியது.

**உங்கள் பாடசாலைகளில், பிரதேசங்களில் நடைபெறும் ஓவியக் கண்காட்சி மற்றும் ஓவிய செயற்பாடுகள் தொடர்பான செய்திகளை எமக்கு அனுப்பி வையுங்கள். அது "படைப்பாக்கமும் பார்வைக்கழகமும்" பக்கத்தில் வெளிவரும்**

# எம்பக்க தேவாலய மரச்சிற்பங்கள்

கண்டி மாவட்டத்தின் உடுனுவரவிலுள்ள கோரள என்னுமிடத்தில் இது அமைந்துள்ளது. இதன் புனிதஸ்தலம் 3 பிரிவுகளைக் கொண்டது.


1. காபா (graha) 2. நடன மண்டபம் 3. ரபான் அடிக்கும் மண்டபம்


இதில் ரபான் அடிக்கும் மண்டபமே பார்வையாளரை ஈர்க்கிறது. ஏனெனில் உயர்ந்த மரச்செதுக்கு வேலைப்பாடுகள் அங்கு உள்ளன. மரச்செதுக்கு சிற்பங்களும், செதுக்கு வேலைத்துதூண்களும், சிறந்த, உயர்ந்த கூரை வேலைப்பாடுகளும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இது கம்பளையை ஆண்ட 3ம் விக்கிரமபாகுவினால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. (கி.பி 1357 - 1374)

இங்குள்ள சிற்ப வேலைப்பாடுகள் மிக நேர்த்தியாக ஆக்கப்பட்டவை சிற்பியின் கைத்திறனின் உச்சவெளிப்பாடு அங்கு செதுக்கப்பட்ட தாமரை அலங்காரங்களில் மீதப்படுகின்றது. இங்கு தேவகன்னியர், அன்னம், இருதலைப்பட்சி, பேரன்னம், சிங்கம், யானையும் சிங்கமும், கஜசிங்கம், மல்யுத்தம், ரபான் அடித்தல், நடனமாடுதல், தாயும் சேயும், போர்வீரர் போன்றவை முக்கிய சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளது.

கூரை வேலைப்பாடுகள் இங்கு சிறப்பிடம் பெறுகின்றன. லியவல (வள்ளிக் கொடி) குந்திரிக்கம், அரும்பு போன்ற அலங்கார வடிவங்கள் சட்டங்களில் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பங்கள் தென்னிந்திய சிற்பியான தெல்மட மூலாச்சாரியால் செய்விக்கப்பட்டவை. இவை தாழ்ப்புடைப்புச் சிற்பங்களாகும்.


குதிரை வீரன் **Horse Back**


சிங்கம் **Lion**


காளையும் யானையும் **Bull & Elephant**


சிங்கம் **Lion**


சிங்கமும் யானையும் **Lion & Elephant**


சிங்கம் **Lion**


**Chit Chat**


தாயும் சேயும் **Mother & Child**




நடனமாதுக்கள் **Dancing Girls**


கின்னரப் பெண் **Mermaid**



அலங்காரம் **Design**


கின்னரப் பெண் **Mermaid**




அன்னம் **Hansa**


பேரன்னம் **Berunda**



போர் வீரன் Soldier


பேர் அன்னம் Berunda


## Wood Carving


அன்னச் சோடி Hansa Puttuva


அன்னச் சோடி Hansa Puttuva


மல் யுத்தம் Wrestlers


**Leya Thabara**


போர் வீரன் Soldier



ரபான் வாசித்தல் Rabana Player


யாழி Makara



**Madol Kurupawa**


**By Courtesy of the Archaeological Department**




**Edbekke Devala**


**Embekke old Street**


Detail of the Roof

# நல்லூர் கந்தசாமி கோயில்




1461ம் ஆண்டிலிருந்து 17 வருடங்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தவன் செண்பகப் பெருமான் எனும் அரசன்

ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு எனும் பெயருடன் இவன் ஆட்சி செய்த காலத்தில் நல்லூர் ஆலயம் அமைக்கப்பட்டது.

1478 இல் சிங்கைப் பரராஜசேகரன் என்பவன் இக்கோயிலைப் புனர்நிர்மாணம் செய்து சிறந்த ஆலயமாக்கினான்.

இக்காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்படைந் திருந்த விஜயநகரச் சிற்ப முறையின் தாக்கம் இங்குள்ள வடிவமைப்புகளில் செல்வாக்கு செலுத்தியிருப்பதைக் காணலாம்.

# சந்திர வட்டக்கல்



- ✩ இலங்கையின் கலை வரலாற்றிலே வெவ்வேறு காலப்பகுதியில் பல்வேறு வடிவிலான சந்திரவட்டக்கல் அமைக்கப்பட்டுள்ளது.
- ✩ அநுராதபுரக்கால சந்திரவட்டக்கல் உயர்ந்த கலை நுட்பம் பொருந்தியது.
- ✩ அநுராதபுரம் ராணி மாளிகையின் வாசலில் அமைக்கப்பட்ட சந்திரவட்டக்கல் குப்த மரபில் ஆக்கம் பெற்றது.
- ✩ நடுவில் அரைத்தாமரை, அடுத்து கொடிவரிசை, அடுத்து தாமரை மொட்டுக்களைக் கவ்விய அன்னவரிசை, அடுத்து மிருகவரிசையில் யானை, குதிரை, சிங்கம், எருது போன்ற மிருகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஓட்ட நிலையில் காணப்படுகின்றது.
- ✩ இறுதி வரிசையில் தீபச்சுடரும் இணைக்க ப்பட்டுள்ளது.

# நடராஜர் திருவுருவம்



இவ் வடிவம் சோழர் காலத்தில் வெண்கலச் சிலையாக உருவம் பெற்றது. நடனக்கலையில் தெய்வமாக வழிபடும் நடராஜரின் ஒன்பது வகையான நாட்டிய நிலையை வெளிப்படுத்து கின்றது.

உடுக்கு படைத்தலையும், தீ அழித்தலையும், அபயகரம் காத்தலையும், ஊன்றிய திருப்பாதம் மறைத்தலையும், தூக்கிய திருப்பாதம் அருளலையும் குறிக்கிறது.

இது பிரபஞ்ச இயக்கத்தை வெளிப் படுத்துகிறது. சுற்றி திருவாசிச் சுடர்கள் காணப்படும் இது, சைவ சமயத்தின் உயர்கலைப் பெறுமானமாக கணிக்கப்படுகின்றது.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகாநிலை ஆசிரியர்
திரு. க. சிறீஸ்கந்தமூர்த்தியினால் ஆக்கம் பெற்ற
மறைந்தும் மறையாத கலைமாமணி வீரமணிஐயரின்
சிலை திறப்பு விழா அண்மையில்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெற்றபோது.....

# கல்விகாரை – பொலநறுவை







பெரிய கற்பாறையைப் பின்னணியாகக் கொண்டு 3 நிலைகளிலும் காணப்படுகின்ற புத்தர் சிலைகள் இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. கி.பி. 12ம் நூற்றாண்டில் ஆக்கப்பட்டதான கல்விகாரை பராக்கிரமபாகுவினால் படைப்பிக்கப்பட்டது. இங்கு சயன நிலையில் காணப்படும் புத்தர் சிலையின் நீளம் 46 அடியாகும்.

இங்குள்ள நின்ற நிலையிலுள்ள புத்தசிலையை ஆனந்தா பிக்கு எனவும் சிலர் அழைக்கின்றனர். விரிந்த தாமரையின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் ஆனந்தா சிலையானது தனது இரண்டு கைகளையும் நெஞ்சோடு அணைத்துள்ளது. இது "பரதுக்க துக்பித்த" முத்திரை என அழைக்கப்படுகின்றது. அதாவது பிறரின் துக்கத்தில் தானும் இணைதல், எனப் பொருள் படுகின்றது.

இங்குள்ள அமர்ந்த நிலைப்புத்தர்சிலை பத்மாசனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கைகள் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து தியான முத்திரையில் அமர்ந்துள்ளது. முகத்தில் சாந்தம் புலப்படுகின்றது. இருமருங்கிலும் இச் சிலைக்குப் பின் பக்கம் தோறணம் அமைக்கப்பட்டுள்ளது.





# தெய்வம் தந்த கலைப் பேரொளி

## மைக்கல் ஆஞ்சலோ

ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, கவிதை எனப் பல்பரிமாணக் கலை ஆளுமைகளைத் தன்னகத்தே கொண்ட மாபெரும் படைப்பாளி மைக்கல் ஆஞ்சலோ. 1475 மார்ச் மாதம் 6ம் திகதி இத்தாலியின் வுளோரன்ஸ் நகரில் பிறந்த இக்குழந்தை மனித குல வரலாற்றில் பண்பாட்டு மறுமலர்ச்சியைக் கொண்டு வந்த புகழுக்குரியதாகியது.

மனித உருவங்கள், உடலமைப்புக்கள், மனித முகங்கள், வெளிப்படுத்தும் பாவங்கள் இவையே அன்று தொட்டு இன்றுவரை ஓவியத்தின் கருப்பொருளாக உள்ளன. எத்தனை காலங்கள் சென்றாலும் சலிப்பின்றி இரசனைக் குரியவையாக நிலைபெற்ற இவ்விடயங்களை தனது ஆளுமையின், படைப்பாற்றலால், கடின உழைப்பின் கலைப் பொக்கிஷங்களாக இவ்வுலகிற்கு விட்டுச் சென்றுள்ளார்.

மனித உடலின் புற அமைப்பை உள்ளது உள்ளபடியே உடற்கூற்றியல் தொடர்பான விஞ்ஞான முறைக்கு அவைாக வரைந்து உலகப் புகழ் பெற்ற ஓவியர் இவராவார். மனித உடலை நுணுக்கமாக வரைவதற்கான பயிற்சியை ஐந்து ஆண்டுகள் நுணுகிக் கற்றபின் இவர் வடித்த சிற்பம் "தாவீது சிலை" (டேவிட்) என்பதாகும். 18" உயரமான, சலவைக் கல்லினாலான, வீரபுருஷனும் வரலாற்று நாயகனுமான டேவிட் அழகு பொழிய இன்னும் நிலை நிறுத்தியமை வியத்தற்பாலது.

பாப்பரசன் 2ம் ஜீலியன் என்பாலின் பணிப்பிற்கு அமைவாக சிஸ்ரைன் தேவாலயத்தில் காணப்படும் இவரது ஓவியங்கள் தேவாலயத்தைக் கலைக் கூடமாக மாற்றியுள்ளன.

டேவிட், மோஸே, பியட்டா போன்ற சிற்பங்கள் மைக்கல் ஆஞ்சலோவின் உன்னத சிற்ப வெளிப்பாடாக உள்ள அதே வேளை சிஸ்ரைன் தேவாலய ஓவியங்கள் மைக்கல் ஆஞ்சலோவின் உன்னத ஓவிய வெளிப்பாடாகும் "இறுதித்தீர்ப்பு" எனும் ஓவியம் இவரது படைப்புக்களில் பிரமாண்டமானதாக கொள்ளப்படுகிறது. இங்கு காணப்படும் ஓவியங்களில் காணப்படும் மனித உருக்கள் சிற்பத்தை ஒத்த திரட்சி உடையதாகக் காணப்படுகிறது. பெண் உருவங்கள் ஆண் தன்மையுடன் வரையப் பட்டுள்ளதாக விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவரது கட்டிடக் கலையின் உச்ச வெளிப்பாடாக எழுந்து நிற்பது வத்திக்கான் நகரில் அமைந்துள்ள புனித இராயப்பர் **(S.t. petero's)** தேவாயலமாகும். நன்கு அலங்கரிக்கப்பட்ட உன்னத கட்டிடக் கலையம்சங்கள் இப் பேராலயத்தை கலைத்துவத்துடன் உருவாக்க வழிவகுத்துள்ளன.

இத்தகைய மாபெரும் கலைஞன் தனது உணர்வுகளை எண்ணங்களை, உலகிற்கு தாரை வார்த்துவிட்டு தன்னுயிரை நீத்தது 1564ல் ஆகும். மனித குலம் உள்ளவரை மைக்கல் ஆஞ்சலோ எனும் பேரொளி கலையுள்ளங்களை சூழ்ந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.


**திருமதி. பப்சி மரியதாசன்**



**சிற்பம் - மோசஸ்**



**சிற்பம் - டேவிட்**



**சிற்பம் - பியாட்டா**

# சிஸ்ரைன் தேவாலய கூரை ஓவியங்கள்





# சுவரொட்டிகள்

கருத்துக்களை எடுத்துச் சொல்லும் தொடர்பு சாதனங்களில் போஸ்ரர்களுக்கு என்று ஒரு தனித்துவம் உண்டு. சித்திரத்தில் போஸ்ரர் சித்திரம் என்பது கூட முக்கியமானதொரு பகுதியாகும். அந்த வகையில் சித்திரத்துறை பற்றிக் கற்கின்ற போது நிச்சயமாக போஸ்ரர் (Poster) பற்றி அறிந்திருத்தல் அவசியம். போஸ்ரர் என்பதனை அழகு தமிழில் நாம் சுவரொட்டி என்றே அழைக்கின்றோம். பெரும்பாலும் சுவர்களில் ஒட்டி காட்சிப்படுத்துவதால் அதற்கு சுவரொட்டி என்று காரணப் பெயரிட்டு எம்மவர் அழைக்கின்றனர். மேலும் இந்த சுவரொட்டிகள் எப்படியானவை, எப்படிப் பிறந்தன, எப்படியான பயன் உடையன என்று இங்கு சற்று நோக்குவோம்.

போஸ்ரர்கள் அதாவது சுவரொட்டிகள் பொதுவாக இரண்டு வகையில் வகைப்படுத்த முடியும். 1. கையில் கொடுக்கப்படும் பிரசுரங்கள் 2. சுவரில் ஒட்டப்படும் சுவரொட்டிகள்



இவற்றில் கையில் கொடுக்கப்படும் துண்டுப் பிரசுரங்களுக்கும், சுவரில் ஒட்டப்படும் சுவரொட்டிகளுக்குமிடையே பெரிய வேறுபாடுகள் உண்டு. கையில் கொடுக்கப்படும் பிரசுரங்களில் அதிகளவான எழுத்துக்களும், விளக்கப்படங்களும் அல்லது கேலிச்சித்திர விளக்கம் அல்லது நடைமுறை விளக்கம் சார்ந்த பிரசுரமாக அமையும்.

சுவரில் ஒட்டப்படுபவை தான் இங்கு முக்கியமானவை. எல்லா ஊடகங்களை விடவும் இந்த சுவரில் ஒட்டப்படும் பிரசுரங்கள் இலகுவில் கருத்தை மக்கள் மத்தியில் விதைத்து விடுபவையாகும். எந்த ஊடகமாக இருந்தாலும் அதனை மனதில் விரும்பி நாடிச் சென்று பார்க்கவோ, கேட்கவோ வேண்டும். அதற்கு அவன் தன் நேரத்தை ஊடகத்துடன் செலவு செய்ய வேண்டும். ஆனால் தன்பாட்டில் செல்லும் போது சுவரில் உள்ள சுவரொட்டி அச்செய்தியைச் இலகுவாக சொல்லிவிடும். இதனால் சுவரொட்டி பற்றி சொல்லும் போது சுவரொட்டியை யாரும் பார்க்கத் தேவையில்லை. அது தானாக தென்பட்டு கருத்தை சொல்லிவிடும் "என்பார்கள். இதனால் தான் இந்த நவீன அவசரமான யுகத்தில் கூட சுவரொட்டிகளிற்கு என்று ஒரு தனித்துவம் நிலவுகின்றது.

வர்த்தகம், கொள்கை முன்னெடுப்பு போன்ற விளம்பர நடவடிக்கைகளுக்கு அனைவரும் தெரிவு செய்வது சுவரொட்டிகளையே. அச்சகக்கலை வளர்ச்சியோடு இந்த சுவரொட்டிகள் வெளியிடும் கலையும் வளர்ச்சி கண்டது. ஆரம்பத்தில் மர அச்சு தயாரிக்கப்பட்டு மைதடவி அச்சுப்பதிக்கப்பட்டது. காலப்போக்கில் வளர்ச்சி அடைந்து இன்று பல வர்ணத் தெளிவோடு அச்சிடும் வகையில் வளர்ச்சி கண்டுள்ளது.

உலகின் முதலாவது போஸ்ரர் ஓவியர் வெறன்றி தீநூலெவ்ஸ் லோத்றெக் (Henrede Toulose Lautrrec - *1864 - 1901*) வரைந்த பிராஸ் பாடகி ஜேன் அவற்றில் (Gen Avatrl) என்பவரின் சுவரொட்டியைக் குறிப்பிடலாம்.

போஸ்ரர் சித்திர வரலாற்றில் (Juliyas Sarat) முக்கியமானவராக கூறப்படுகின்றார். *(1873 - 1936)* 1ம் உலக மகா யுத்தத்தின் பின் பாரிய மாற்றம் ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆயுதப்படை நடவடிக்கைகள் வெற்றிகள் பற்றியெல்லாம் சுவரொட்டிகள் வெளியிடப்பட்டன. இதனால் இக்காலப்பகுதி அதிகளவு சுவரொட்டிகள் வெளியான காலம் என்று கூறப்படுகிறது.

சுவரொட்டி வரலாற்றில் அமெரிக்காவில் *(1919 ம் ஆண்டு)* வெளியிடப்பட்ட "சாம் மாமா (Uncle Sam) என்பது தரமானது பிரபல்யமானதாக கூறப்படுகின்றது. இதில் (I Won you) என்ற வாசகமும் சுண்டு விரலை நீட்டிய கையுமே காணப்படுகிறது. இது அக்காலத்தில் பலரையும் கவர்ந்ததாகும். இதில் 10 எழுத்துக்களும் ஒரு படமும் மட்டுமே உண்டு. (I won you, USA)

சுவரொட்டிகள் பார்த்ததும் சட்டென விளங்கக் கூடியதாகவும் கண நேரத்தில் வாசித்து விளங்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் உருவங்கள் கவர்ச்சி உடையதாகவும் கருத்துத் தெளிவு மிக்கதாகவும் இருப்பதுடன் வர்ணம் கண்ணினால் பார்க்க துண்டக் கூடியதாகவும் அமைதல் வேண்டும். எழுத்துக்கள் பொருத்தமான வர்ணத்தில் தெளிவாக இருத்தல் வேண்டும். துலக்கமாக இருந்தால் தான் பார்வையாளன் உடனடியாக விளங்கிக் கொள்வான். கருத்து மயக்கங்கள் இருக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். வாசகத்துக்கும் வரையப்பட்ட காட்சிக்கும் இடையில் முரண்பாடு இருத்தல் ஆகாது. அத்துடன் இவை ஒட்டப்படுவதற்கு ஏற்ப நிலைக்குத்து தன்மை உடைய படங்களாக இருத்தல் நன்று.

இன்று எம் பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும்





சுவரொட்டிகள் தான் நிறைந்துள்ளன. வீட்டு மதில்களுக்கு வர்ணம் பூசவேண்டிய தேவையே இல்லை. அந்த வேலை பெருமளவு சுவரொட்டிகளால் ஈடுசெய்யப் பட்டுள்ளது. இவற்றில் பலவகையானவை உண்டு. தேசியம் சார்ந்தவை. அரசியல் கட்சிகள் கோயில் திருவிழா போன்றனவும் வர்த்தகம், பொருள் மற்றும் இதர சேவைகள் பற்றிய விளம்பரச் சுவரொட்டிகள் போன்றனவும் இன்னொரு வகையாகும். இவை சுவரொட்டிக்கான அம்சம் உடையதாகவோ அல்லது கலைவனப்புடைய தாகவோ அச்சிடப்பட வேண்டும் என்ற பிரக்ஞையே அற்றநிலையில் வெளியிடப்பட்ட தாகவே அதிகம் தோன்றுகின்றது.

இவற்றை எல்லாம் விட எந்தப் பொருள் என்றாலும் பெண்களின் அழகிய தோற்றம் என்ற பெயரில் ஆபாசப்பார்வையுடனும் சுவரொட்டிகள் வருகின்றன. இவற்றால் விளம்பரம் சிறப்பாக நடைபெறுகின்றதோ இல்லையோ விபத்து நடப்பதாக ஆய்வுத் தகவல்கள் கூறுகின்றன. சில நாடுகளில் சுவரொட்டிகள் ஒட்டப்படுவது தடை செய்யப்பட்டு மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. எமது பிரதேசத்திலிருந்து இன்று வெளியாகும் சுவரொட்டிகள் வெளிவரும் போது நிச்சயமாக அவை சிறந்ததாக அமைய வேண்டுமாக இருந்தால் சித்திரத்துறை சார்ந்தோர் இத்துறையில் அதிக கவனமெடுத்து புதிய வடிவமைப்புக்கள் ஊடாக சுவரொட்டிகளை ஆக்க வேண்டும்.

**சோ. சி. சிவானந்தராஜா**

---

### ஈசுருமுனி விகாரை



கி.பி 3 ம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் காலத்தில் கட்டப்பட்டது. இவ் விகாரையில் வலது புறம் சரிந்து அரிதுயில் கொள்ளும் புத்த பெருமானின் வர்ண உருவம் காணப்படுகிறது. இவ் விகாரையின் முன் புறம் பெரிய தடாகம் உண்டு. அதில் கொத்துச் சித்திரம் காணப்படுகிறது.

### தம்பதிகள் சிலை



இது ஈசுருமுனி விகாரை தொல் பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. குப்த சிற்பப் பாணியில் அமையப் பெற்றது. இலங்கையின் உயர் கலை வனப்புமிகு சிற்பங்களில் இதுவும் ஒன்று.

### குதிரைமுகமும் இளைப்பாறும் மனிதனும்



கி.பி 6ம் நூற்றாண்டு பல்லவ சிற்ப பாணியில் அமைக் கப்பட்டது. ஈசுருமுனி விகாரை பாறையின் மேற் பக்கத்தில் இது படைக்கப்பட்டுள்ளது.

### அரச குடும்பம்



ஈசுரமுனி விகாரை தொல் பொருள் காட்சி அகத்தில் பேணப் படுகின்றது. கி.பி 6ம் நூற்றாண்டில் அமையப் பெற்ற இதில் பல்லவ சிற்பப்பாணி புலப் படுகிறது.

நடுவில் அமர்ந்திருப்பவர் அரசன் என்றும் வலது புறம் சாலிய குமாரனும் இடது புறம் அசோக மாலாவும் அமரந்திருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### நீரில் குளிக்கும் யானைகள்



ஈசுரமுனி விகாரை பாறை பிளவுக்கு இருமருங்கிலும் குறைப் புடைப்பாக ஆக்கம் பெற்றுள்ள இவை பல்லவ சிற்ப பாணியில் அமையப்பெற்றது.

**தூரிகைச் சிந்தனை**

ஆயிரம் அர்த்தமுள்ள வார்த்தைகளுக்கு நிகரானது,
ஆக்கபூர்வமான ஒரு ஓவியம்

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**51 T I**

| | |
|---|---|
| I | |
| II | |
| III | |
| மொத்தம் | |
| | |
| | |

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2003 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை, 2003 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2003**

චිත්‍ර කලාව I
சித்திரக் கலை I
Art I

පැය එකයි
ஒரு மணித்தியாலம்
One hour

※ எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

சுட்டெண் ..............................

● கீழே தரப்பட்டுள்ள நிழற்படத்தைப் பயன்படுத்தி 01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடைய எழுதுக.



1. மேலுள்ள நிழற்படத்தில் காணப்படும் சிலையின் பெயரைக் குறிப்பிடுக. ..............................

2. இச்சிலையினால் புத்தர் பெருமானின் எந்நிலையைப் புலப்படுத்துவதைக் கலைஞன் நோக்கமாகக் கொண்டான்?
..............................

3. இச்சிலையினை ஆக்குவதில் செல்வாக்குச் செலுத்திய இந்தியக் கலைமரபு யாது? ..............................

4. இச்சிலைக்கும் கல்விகாரையின் அமர்ந்தநிலைப் புத்தர் சிலைக்கும் இடையிலான ஒரு வேறுபாட்டை எழுதுக.
..............................

5. இச்சிலைக்குச் சமமான அமைப்புடைய சிலை ஒன்றை இந்தியாவில் காணலாம். ஆனால் அது தர்மச்சக்கர முத்திரை உடையது. அச்சிலையின் பெயர் குறிப்பிடுக.
..............................

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களுக்கு **A, B, C, D** என்ற படங்களைப் பயன்படுத்திச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து எழுதுக.




6. பரம்பரை அலங்காரக் காட்டுருக்களின் வகைப்படுத்தலுக்கு ஏற்ப இங்கு காணப்படும் அலங்காரங்கள் எந்த வகுதியைச் சார்ந்தவை?

(..........................................................)

7. **A** எழுத்தினால் காட்டப்படும் மலர் ஆக்கம் அடிப்படை இரேகைச் சித்திரப் பயிற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் ஒரு அலகை அடிப்படையாய்க் கொண்டது. அந்த அலகின் பெயரைக் குறிப்பிடுக.

(..........................................................)

8. இங்குள்ள ஒரு அலங்கார அலகு கண்டி விகாரையின் சுவரோவியங்களின் இடைவெளிகளை நிரப்பப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டனவாகும். இந்த அலகின் பெயரைக் குறிப்பிடுக.

(..........................................................)

9. இயற்கை உலகில் காணமுடியாத, கலைஞனின் கற்பனையால் ஆக்கப்பட்ட அலங்கார அலகினைத் தெரிவு செய்து பெயர் குறிப்பிடுக.

(..........................................................)

10. C எழுத்தினால் காட்டப்படுவது இயற்கையிலுள்ள பிரபலமான ஒரு பூவோடு தொடர்புடைய ஆக்கமாகும். இந்த ஆக்கத்துடன் தொடர்புடைய மலரினைப் பெயரிடுக.

(..........................................................)

● 11 தொடக்கம் 15 வரை தரப்பட்டுள்ள வாக்கியங்களின் வெற்றிடங்களை நிரப்புக

11. சோழர் கட்டடக் கலையோடு இணைந்த பொலன்னறுவை இரண்டாம் சிவாலயம் .................................. இராணியின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது.

12. அஜந்தா சுவரோவியங்களிடையே இலங்கையில் முக்கியத்துவம் பெறும் வரலாற்றுச் செய்தி ஒன்று விவரிக்கப்பட்டுள்ளது. அது .................................. என்னும் பெயரால் இனங்காணப்படுகிறது.

13. கம்பளைக் காலத்தில் கட்டப்பட்ட இலங்காதிலகா விகாரை .................................. கலைஞனால் உருவாக்கப்பட்டது.

14. கனவளவு வெட்டுதல், குறியீடுகள் வெட்டுதல் முதலிய நுட்ப முறைகள் மரபுக் கிராமியக் கலையான .................................. கைத்தொழில் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டது.

15. எகிப்திய சிற்பங்களிடையே விமர்சகர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்த மார்பளவு மாதிரி அக்னேடன் அரசனின் அரசி எனக் கருதப்படுகிறது. அவளின் பெயர் (..................................) ஆகும்.

● 16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் பிரதான கூற்றுக்குப் பொருத்தமான தொடரைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

16. பொரளையிலுள்ள கோதமி விகாரையின் ஓவியங்களில் மாறனைத் தோற்கடிக்கும் சந்தர்ப்பத்தில் புத்தர் பெருமான் சித்திரிக்கப்பட்டிருப்பது.

1) பூமிஸ்பரிச முத்திரையினால் 2) தியான முத்திரையினால்
3) தர்மச் சக்கர முத்திரையினால் 4) விதர்க்க முத்திரையினால்

17. மைக்கல் ஆஞ்சலோவினால் சிஸ்ரன் தேவாலயத்தில் வரையப்பட்ட சுவரோவியங்களிடையே விமர்சகர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.

1) ஆதாம் ஏவாள் சுவர்க்கத்திலிருந்து விரட்டப்படல் 2) நோவாவின் குடிபோதை
3) ஆதாமின் படைப்பு 4) கபிலவஸ்துபுரவுக்கு வருகை தரலில்

18. சாஞ்சி சிற்பக் கலைஞர் இயற்கையின் அதிசயங்களைச் சாமர்த்தியத்துடன் செதுக்கியிருப்பது

1) சங்கஸ்ஸ ஏணிக் காட்சியில்
2) ஜடிலவை அடக்குதலில்
3) துறவு பூணல் செதுக்கலில்
4) கபிலவஸ்துபரவுக்கு வருகை தரலில்

19) நடனக் கலையில் மதிப்புமிக்க நடனமான கோலாட்ட நடனத்தைச் சித்திரிக்கும் பெறுமதிக்க செதுக்கல் காணப்படுவது.

1) கடலாதெனிய விகாரையின் அடித்தளத்தில்
2) யாப்பாகுவ கற்சுவரில்
3) எம்பக்க தேவாலய மரச்செதுக்கலில்
4) இலங்காதிலக விகாரையின் வெளிப்புறச் சுவரின் மணியுருக்கட்டு (பொரதம்) நிரைகளுக்கிடையில்

20. புராதன விகாரை ஓவியக்கலைஞர்கள் சிவப்பு நிறத்தைப் பெறுவதற்குப் பயன்படுத்தியது

1) பெருநெருஞ்சி (கொகட்டு) மரத்தின் பாலை
2) அவரி மரத்தின் சாறை
3) வத்தகைக்காய் (பதகி) அவித்த நீரை
4) சாதிலிங்கத்தை

● 21 தொடக்கம் 25 வரை தரப்பட்டுள்ள வரிப்படங்களுக்குப் பொருத்தமான உருவை E,F, G, H, I வரிப் படங்களிலிருந்து தெரிவு செய்து அதற்குரிய ஆங்கில எழுத்தை வினாவுடன் காட்டப்பட்டுள்ள சித்திரத்துக்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

21.  (...............)

22.  (...............)

23.  (...............)

24.  (...............)

25.  (...............)

 E

 F

 G

 H

 I

● 26 தொடக்கம் 30 வரை தரப்பட்டுள்ள சொற்களின் கருத்தை விளக்கும் வகையில் ஒவ்வொரு வாக்கியம் எழுதுக. வாக்கியத்தை வாசிக்கும் போது சொல்லின் கருத்து நன்கு விளங்கக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

26. உருவரை தகடு (ரெம்பிளேற்) ..............................

27. ஆகாயத் தூரநோக்கு..............................

28. வனைசக்கரம் ..............................

29. மணியுருக்கட்டு (பொரதம்) ..............................

30. இஸ்லாமிய எழுத்து ஓவியம் ..............................

- 31 தொடக்கம் 35 வரை தரப்பட்டுள்ள அட்டவணையின் வெற்றிடங்களை J, K, L, M, N என்ற ஓவியங்களைப் பயன்படுத்தி நிரப்புக.



J K L M N

| | ஓவியங்களின் எழுத்து | ஓவியத்தின் தலைப்பு | ஆக்கிய கலைஞர் |
|---|---|---|---|
| 31. | J | ........................................ | ........................ |
| 32. | K | ........................................ | ........................ |
| 33. | L | ........................................ | ........................ |
| 34. | M | ........................................ | ........................ |
| 35. | N | ........................................ | ........................ |

- 36 தொடக்கம் 40 வரை கீழே தரப்பட்டுள்ள கலையாக்கத்தினை இனங்கண்டு அதன் கலையம்சங்களைப் பகுப்பாய்வு செய்யும் வகையில் ஒவ்வொரு இலக்கத்தின் கீழும் தரப்பட்டுள்ள உப தலைப்புக்களுக்கு ஏற்ற ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.



36. இனங்கண்டதாக ........................................

37. காலம் ........................................

38. மரபு ........................................

39. நுட்பமுறை ........................................

40. கலைஞரின் ஆற்றல் ........................................

## விடைகள்

1. மகாமேகவனப்பூங்கா புத்தர் 2. தியானம்/அன்பு/கருணை 3. குப்த கரைமரபு
4. உடை இரட்டைவரி/பாறையுடன் ஒட்டி உள்ளமை/சிற்பமரபு 5. சரணாத் புத்தர் சிலை
6. தாவர/உத்பீக 7. வகதெக (C) 8. தாமரை (B) 9. கடும்புல்மலர் (D)
10. தாழம்பூ/வபடகேமல 11. வானமன் மாதேவி ஈஸ்வரமுடையார் 12. விஜயன் வருகை
13. ஸ்தாபதிராஜர் 14. வெஸ்முன/முகமூடி 15. நெபர்ரிரி
16. 2 17. 3 18. 2 19. 3
20. 4 21. H 22. I 23. E 24. G 25. F
26. உள்ளும் புறமும் வடிவத்தை உபயோகிக்கக்கூடிய அச்சு
27. ஆகாயத்திலிருந்து தூரத்தைக் காணும் தன்மை
28. (யட்டிபேறுவ) மட்பாண்டம் உருவாக்கும் சுழற் சக்கரம்
29. சுவர்களில் வெளித்தள்ளிய தன்மை
30. அரபு எழுத்துக்கலை அலங்காரம்
31. குவார்ணிக்கா - பிக்காசோ 32. நாயிகா/ தலைவி - ஜோர்ச்கீற்
33. தட்டெறிவோன் - மைரன்
34. வெள்ளையாரன பரிசளித்தல் - தேவறகம்பொல சில்வரட்ண உனான்சே
35. கடைசி ராப்போசனம் - டாவின்சி 36. சிகிரியா
37. ஐந்தாம் நூற்றாண்டு/அனுராதபுரக் காலம் 38. குப்த கலைமரபு/மகாகலைமரபு
39. ஈரச்சுதை/இயற்கைவர்ணம் 40. நேர்த்தியான வடிவமைப்பு

# க.பொ.த (சா.த) சித்திரக்கலைப் பாடப்பரப்பின் உள்ளடக்கமும் அதன் புள்ளி மதிப்பீட்டு அம்சங்களும்

க.பொ.த சாதாரண தரத்தில் சித்திரக்கலை பாடத்தின் பரப்புகளையும் அதன் மதிப்பீட்டு அம்சங்களையும் அறிந்திருத்தல் அவ்வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு பேருதவியாக அமையும்.

சித்திரக்கலைத்துறைப் பாடத்திற்குப் பொருத்தமான வள ஆசிரியர்கள் வழிகாட்டுவதற்கு இல்லை என்கின்ற பெரும்குறை பாடசாலைகளிலே காணப்படுகின்றது. சித்திரக்கலை முக்கியமான தொரு பாடப்பரப்பென்பதாலும் பல மாணவர்கள் இப்பாடத்துறைக்கு தோற்றுவதாலும் இது தொடர்பான வழிகாட்டல்கள் அவசியமாகின்றது. அதனாலேயே சித்திரக்கலைப் பாடப்பரப்பில் உள்ளடக்கத்தையும் அதன் மதிப்பீட்டு அம்சங்களையும் இப்பகுதியிலேயே ஆராய்வது மிகவும் வேண்டப்படுவதொன்றாகிறது.

க.பொ.த சாதாரணதர சித்திரக்கலைப் பாடமானது. மூன்று பகுதிகளைக் கொண்ட பரப்பாக காணப்படுகின்றது. முதலிலே சித்திரக்கலை பகுதி 1 ஐ நோக்குவோம்.

சித்திரக்கலை பகுதி I - 40 வினாக்களைக் கொண்டிருக்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு புள்ளியின் அடிப்படையில் 40 புள்ளிகள் மேற்சொல்லப்பட்ட மதிப்பீட்டம்சங்களின் அடிப்படையில் அமையும். பொருத்தமான கலைப்படைப்புக்களை இனங்காணல். இணைத்தல், கீறிட்ட இடம் நிரப்புதல், பொருத்தமானதைத் தெரிதல், வினாவிடை, சரி, பிழையிடல் போன்றவையை உள்ளடக்கியதாக இவ்வினாக்கள் அமைந்திருக்கும். வினா இலக்கம் 36-40 வரை கலைப்படைப்பொன்றை இனங்கண்டு அதன் கலை மதிப்பீட்டு அம்சங்களை எழுதுதல் வேண்டும். முதலில் கொடுக்கப்பட்ட கலைப்படைப்பை இனங்கண்டு எழுதுதல் வேண்டும் அதன் பின்னர் அதன் கருப்பொருள், படைத்தவர் (தெரிந்திருப்பின்) நுட்பமுறைகள், ஊடகம் அதன் கலைப்பண்புகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த சித்திரக்கலை I வினாப்பத்திரத்திலேயே மாணவர்கள் விடையை எழுதி ஒப்படைக்க வேண்டப்படுவர்.

சித்திரக்கலை - பகுதி II

இது பொருட்கூட்ட வரைதற் சித்திரம் எனப்படும் இதன் மூலம் மாணவர்களிடத்தேயிருந்து எதிர்பார்க்கப்படும் பிரதான நோக்கங்களாக

இயற்கை, செயற்கைப் பொருட்களின் இயல்பு வடிவமைப்புக்களின் தன்மைகளை விளங்கிக்கொள்ளும் திறமை, கோட்பாடுகளை கையாளும் ஆற்றலை வளர்த்தல்.

வர்ணத்தைப் பாவித்துக் கொள்ளும் நுட்பமுறைகளைப் புற இயல்புகள் வெளிப்படும் வகையில் வர்ணங்கள் உபயோகித்தல் தொடர்பான திறன்களை அளவிடல்.

பொருட்கூட்டவரைதலில் இரண்டு சித்திரங்களை வரைதல் வேண்டும். ஒன்று இரேகைகளால் ஆனதும் மற்றயது வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்தப்படும் சித்திரமுமாகும். இரேகைகளால் வரையப்படும் சித்திரத்தில் மாணவன் இரேகை தொடர்பான திறன்களை வெளிப்படுத்தல் எதிர்பார்க்கப்படும். இதற்கு 05 புள்ளிகள் வழுங்கப்படும் வரையப்படும் பொருட்கூட்ட வரைதல் வர்ணச் சித்திரத்திற்கு 30 புள்ளிகள் பின்வரும் எதிர்பார்ப்புகளின் (நியதிகளின்) அடிப்படையில் அமையும்.

1) பரப்பினை (கடதாசியை) கருத்துடன் உபயோகித்துள்ள திறன் - 06 புள்ளிகள்
2) பிரமாணம், பொருட்களின் இயல்புகளை வெளிப்படுத்திக் காட்டும் திறன் - 06 புள்ளிகள்
3) கோட்பாடுகளை பின்பற்றல், தொடர்பான திறன் - 6 புள்ளிகள்
4) வர்ணப்பாவனை, புறத்தோற்ற இயல்புகளை காட்டுதல் - 6 புள்ளிகள்
5) பொதுப்பூரணப்பாடு - 6 புள்ளிகள்

ஆகமொத்ததில் பொருட் கூட்ட வரைதல் சித்திரத்திற்கு 30 புள்ளிகள் வழங்கப்படும் இப்பொருட்கூட்ட ஒழுங்கமைப்பில் க.பொ.த.ச.தரத்திற்கு ஒதுக்கப்படும் நேரம் 2 மணித்தியாலங்களாகும். இரேகைகள்ால் வரையப்படுதலுக்கு பொருட்கூட்டவரைதல் 10 நிமிடங்கள் வரை செலவு செய்யலாம் இவ்வரைதலுக்கு பென்சில், பேனா, தூரிகை என்பன பயன்படுத்த முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. பொருட்தொகுதியிலுள்ள அடித்தளம் பொருட்களின் தொகுதிக்கேற்ப மாற்றுவதற்கு மாணவர்களுக்கு சுதந்திரமுண்டு. ஒழுங்குபடுத்தப்படும் பொருட்களில் இலைகளைக் கொண்ட கிளைபோன்ற பகுதிகளைத்தவிர மற்றயவை கண்மட்டத்திற்கு கீழே தெரியக் கூடியவாறு ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதையும் அவதானிக்கலாம்.

மாணவர்கள் இச்சித்திரத்தில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சுயமான பயிற்சிகளை மேற்கொள்வது சிறந்ததாகும். பல்வேறு விதமான கனவளவு உருவங்களை சிறிய அளவில் ஒழுங்குபடுத்தி படிப்படியாக வரையக்கற்பதனூடாக இவ்வகையான

படவாக்கத்தில் நல்ல பெறுபேற்றையடைய முடியும்.

சித்திரக்கலை பகுதி III

இதுவும் செயல்முறை வினாப்பத்திரமாக அமைகிறது. 'அ' 'ஆ' ஆகிய இரு பகுதிகளைக் கொண்ட இதில் 'அ' பகுதி கருத்து வெளிப்பாட்டு படவாக்கமும். 'ஆ' பகுதியில் அலங்காரமும் இடம்பெறும் மேற்குறித்த அ, ஆ பகுதியில் இருந்து ஏதாவது ஒரு வினாவை மட்டும் தெரிந்து பட ஆக்கம் செய்தல் வேண்டும்.

சித்திரக்கலை பகுதி III (அ)

கருத்து வெளிப்பாட்டுப் படவாக்கம் - இதில் எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான நோக்கமாக சூழலின் இயல்புகளையும் அவற்றிடையே நிகழ்கின்ற நிகழ்ச்சிகள், செயற்பாடுகள் தொடர்பான அனுபவங்களை சித்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகின்ற ஆக்கச்சிறப்புடன் கூடிய ஆற்றலையும் நயத்தல் திறனையும் மதிப்பீடு செய்வதாகும்.

இங்கு மாணவன் ஒவ்வொருவரும் தெரிவுசெய்து கொள்ளும் ஒவ்வொரு தொனிப் பொருளுக்கேற்ப ஓவியத்தை வரைந்து கொள்ளும் போது பல்வேறுபட்ட மட்டத்தில் திறமைகளை வெளிக்காட்டும் பண்புகள், எதிர்பார்க்கப்படும் மாணவர்களது செயல்முறை மட்டங்களை இனங்கண்டு பின்வரும் நியதிகள் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

சித்திரக்கலை புள்ளி வழங்கல் பகுதி III

1) உரிய தொனிப் பொருளுக்கு பொருத்தமான சூழலையும், சந்தர்ப்பங்களையும் வெளிப்படுத்தி உள்ள தன்மை - 06 புள்ளிகள்

2) மனித மெய்ந்நிலைகள், பிராணிகள் தளத்தில் படவாக்கம் செய்துள்ள தன்மை - 06 புள்ளிகள்

3) ரேகை வடிவமைப்புகளில் காணப்படும் விசேட தன்மை - 06 புள்ளிகள்

4) வர்ண ஊடகத்தை உபயோகித்துள்ள திறன் - 06 புள்ளிகள்

5) பொதுப் பூரணப்பாடு - 06 புள்ளிகள்

இப்படவாக்கத்திலும் மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு சூழல், மனித மெய்நிலைகள் பல்வேறுபட்ட அசைவுகள் என்பவற்றில் பயிற்சிகளை சுயமாக ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சித்திர ஆசிரியர் உதவியுடன் அல்லது சிறந்த சித்திரகாரர்களின் பயிற்சி அனுபவங்களையும் பகிர்ந்து பயிற்சி பெறுவதனூடாக மென்மேலும் திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம். ஆரம்பத்திலிருந்தே நீர்வர்ண உபயோகத்தை பயன்படுத்துவதன் மூலம் உயர்ந்த சித்திரங்களை வரைவதற்கான அடித்தளத்தை இட்டுக் கொள்ளலாம்.

பகுதி III அலங்காரமும் அலங்கரிப்பு ஆக்கமும்

அன்றாடம் வாழ்க்கையில் ஏற்படுகின்ற பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களுக்கும் தொடர்பான செயற்பாடுகளுக்கும் தேவையான ஆக்கங்களை திட்டமிடுதல் அலங்கரித்தல் தொடர்பான திறன் வளர்சியும் இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது.

பகுதி III ல் 'அ' பகுதியை விட 'ஆ' பகுதியாகிய இப்பகுதியையே அதிக மாணவர்கள் விரும்பித் தெரிவு செய்கின்றனர் இயற்கை, மனித மெய்ந்நிலைகள் போன்ற கற்பனைப் படவாக்கத்தினை பலமாணவர்களாலும் ஆக்க முடியாமையே இதற்குக் காரணமாகும்.

இப்பகுதியும் இலகுவாக சில தரவுகளின் அடிப்படையில் யாவரும் வரைந்து கொள்ளக்கூடிய அலகாகும். குறிப்பிட்ட அலங்கார அலகுகளை வரைந்து வர்ணம் தீட்டிப் பழகுவதால் அவற்றையே எந்த அலங்காரப்படவாக்கத்திலும் பிரதி செய்வதனூடாக இப்பகுதியில் உயர்ந்த நிலையை அடையலாம். உதாரணமாக குறிப்பிட்ட அலங்கார அலகுகளான கத்தரிப்பூ, அன்னாசிமலர், பலாப்பொத்தி, குத்திரிக்கம், போன்றவற்றை வரைந்து வர்ணம் தீட்டிப் பழகுவதால் அவற்றை ஒரு மரவேலைக்கோ, அல்லது மட்பாண்ட வேலைக்கோ அல்லது புடவை அலங்காரத்திற்கோ பயன்படுத்த முடியும். இதைவிட புதிய அலங்காரங்களில் நவீன பாணிகளிலும் இவற்றை வரைய முடியும்.

இவ்வாக்க அலங்காரத்திற்குரிய புள்ளி வழங்கும் நியதிகளாக பின்வருபவை கொள்ளப்படுகின்றன

1) தொனிப் பொருளுக்கு பொருத்தமான புதிய ஆக்கச் சிறப்புடையதாக திட்டமிட்டுக் கொள்ளும் திறன் - 06 புள்ளிகள்
2) பாவனைக்கு உகந்த வகையில் கைத்தொழிலுக்கு பொருத்தமான இருத்தல் - 06 புள்ளிகள்
3) இரேகை வடிவமைப்புக்களை கருத்துடன் உபயோகித்தல் தொடர்பான திறன் - 06 புள்ளிகள்
4) பொருத்தமான வர்ணத் தேர்வும் உபயோகிக்கும் திறனும் - 06 புள்ளிகள்
5) அலங்கார அழகும் நிர்மாணிப்பின் பூரணப்பாடும் - 06 புள்ளிகள்

மொத்தப்புள்ளி 30 புள்ளிகள்

எனவே சித்திரக்கலையில் மேற் சொல்லப்பட்ட பாடப்பரப்பின் உள்ளடக்கத்தையும் அதன் மதிப்பீட்டம்சங்களையும் அறிந்து ஒழுகுவதன் மூலம் உயர்ந்த பெறுபேறுகளை அடைந்து கொள்ளலாம்.

திரு. க. ரட்னேஸ்வரன்

## அவுக்கண புத்தர்சிலை



★ இச்சிலை தாதுசேன மன்னனால் செய்விக்கப் பட்டதென ஆய்வாளர் சிலர் கூறுகின்றனர்.

★ அமராவதி கலை மரபினைப் பின்பற்றி இது அமைக்கப் பட்டுள்ளது.


★ இலங்கையில் பழமை வாய்ந்த உயர்ந்த புத்த சிலை இதுவெனக் குறிப்பிடப் படுகின்றது.

★ இது தாமரை பீடத்துடன் சேர்த்து 46 அடி எனக் குறிப்பிடப் படுகின்றது. (தாமரை பீடம்நீக்கி 39 அடி)

★ இச்சிலையின் தலையிலுள்ள உச்சிக் குடும்பி (சிரஸ்பத) பிற்பட்ட காலத்தில் அமைக்கப்பட்டது.

★ வலதுகரம் அபய முத்திரையும், இடது கரம் அங்கியைத் தாங்கிய படியும் அமைக்கப்பட்டுள்ளது.

## காவற் சிலை ரத்னபிரசாத




★ இது ரத்தினப் பிரசாத காவற் சிலையாகும்.

★ அநுராதபுரக் காலப்பகுதிக்குரிய மிக உயர்ந்த கலை வனப்புக் கொண்ட வடிவம் இதுவாகும்.

★ இது 4 அடி 6 அங்குல உயர முடையது.

★ குப்த கலை மரபின் செல்வாக்கிற்கு உட்பட்டது

★ சட்டமகர அலங்காரம், கலசம், தென்னம்பூ, குள்ளவடிவம், ஏழுதலை நாகம், மற்றும் ஆடை ஆபரணங்கள் மிகவும் நேர்த்தியாக செதுக்கப்பட்டு காவற் சிலைக்கு மேலும் அழகூட்டுகின்றன.


## கலைப்படைப்பில் காண்பதென்ன? இல 1



இங்கு காட்டப்பட்ட கலைப்படைப்பை இனங்கண்டு அதன் கலைப்பண்புகள் பற்றி (ஆக்கியவர் பெயர், தலைப்பு உட்பட) 5 வசனங்கள் எழுதி அனுப்புங்கள். சரியாக எழுதுவோர்க்கு பரிசுகள் காத்திருக்கின்றது. அத்துடன் அடுத்த 'துகிலிகை' இதழில் தங்கள் பெயர் விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

மாணவர் பக்கத்திற்கு ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை தொடர்பாக உங்களிடமுள்ள ஆக்கபூர்வமான விடயங்களை (விளக்கப்படங்களுடன் உடன் அனுப்புங்கள்.

நீங்கள் வரையும் ஓவியங்களையும் பிரசுரத்திற்காக துகிலிகை ஏற்றுக் கொள்ளும். உங்கள் பெயர் விபரங்களுடன் பாடசாலை முகவரியையும் எழுதத் தவறாதீர்கள்.



நாடறிந்த பிரதமை ஓவியக் கலைஞர் கணபதி இராசரத்தினம் கடந்த 06-09-2005 காலமானார்.

சிறந்த பிரதமைக் கலைஞரும், ஆற்றலுள்ள கலைவிமர்சகரும், யாழ்ப்பாணம், நுண்கலைப்பீட சித்திரமும் வடிவமைப்பும் வருகை விரிவுரையாரும் பிரதிமைக் கலைமாமணி, கலாபூஷணம் போன்ற விருதுகளைப் பெற்றவருமான ஓவிய ஆசான் க. இராசரத்தினம் அவர்களை மனதிருத்தி, அஞ்சலித்து அவரது ஓவிய அறநெறி என்கின்ற நூலிலிருந்து பிரதிமைக் கலைபற்றி சில விடயங்களை 'துகிலிகை' உங்களுடன் பகிர்கின்றது.

"ஓவியம் ஓர் அழகியற் கலை. அது பார்ப்பவரின் உள்ளத்தை உலுப்பிவிடக் கூடிய பாண்டித்தியமான கலைப் பரிமாணத்தை வேகமாகப் பாய்ச்சித் தன் வலுவைக் காட்டிய வண்ணமே இருக்கும். அதைப் படைத்தவன் எத்தன்மையன் எவ்வகையன் ஆகிலும் அவன் காணும் உலகத்தையே படைக்கின்றான். அதனால் அது உலகின் பிரதிமையாகிறது. அதில் அவனும் இரகிசியமாக "நுழைந்து கொள்வான்"

க. இராசரத்தினம்

## பிரதிமைக்குப் பிரதான அம்சம் உருவ ஒற்றுமை

ஓவிய அறிநெறியிலிருந்து....

ஒளிப்படக் கருவியின் துணை கொண்டு பெறும் உருவம் 'திடுதிப்பென' எதிர்பாராத ஒரு விபத்து எனநான் நம்புகிறேன். ஒரு நடிகனைக் கூட எத்தனையோ ஸ்டில்களை எடுத்து அவற்றில் ஒருவிபத்திலகப்பட்ட படத்தை வெட்டிச் சுருக்கி இடத்துக்கேற்பப் பொருத்திச் சுவரொட்டி தயாரிப்பதைப் பார்த்துள்ளோம் ஒளிப்படம் இயற்கையைப் பிரதிபலிப்பதில்லை, அது இயற்கையின் இயங்கும் உயிர்த்தன்மையை அற்றுப் போகச் செய்து விடுகிறது. ஒரு அலையடிக்கும் காட்சியைப் படமாக்கினால் அது ஒரு தகரத் தகட்டைக் கசக்கி மடக்கி வைத்தது போலாகத் தெரியும். அதே போல ஒளிப்படம் அமர்பவரின் ஆளுமையின் அதிர்வுகளின் அலைகளின் ஒரு பகுதியைத்தான் பெறுகிறது. அதை அவன் ஏற்க இயலாது. ஆனால் அது போலத் தோன்றுகிறது என்பதே பொருந்தும்.

மேலும் அமர்பவன் கமெறாவின் கதவுகள் திறந்து மூடும் வரை அதைப் பார்த்தபடி மனத்துள்ளிருக்கும் பிரச்சினைகளை அசை போட்டுக் கொண்டு இருப்பான். சில நடிகர்களும் அரசியல் நடிகர்களும் கமெறாவுக்கு எப்படி "போஸ்" கொடுப்பதென நன்கறிந்திருப்பார்கள். அதன் முடிவு கரிக்கெச்சர் எனும் கேலிச் சித்திரம் போல அமைந்துவிடும். இதற்காக சில நடிகர் நடிகையர் அடிக்கடி தங்கள் படப்பிடிப்பாளரை மாற்றிக்கொள்வர் ஆனால் பிரதிமைக் கலைஞன், ஒருவனின் ஆளுமையின் பிரதிபலிப்புக்களை ஒன்று கூட்டி முகத்தைப் படைத்து ஒளிப்படத்தை வெற்றி கொள்கிறான்.

இதனடிப்படையில் உருவக ஒற்றுமையில் மிக்க கவனம் செலுத்தும் ஓவியன் அமர்பவரின் முகத்திலுள்ள தசை நார்களின் மாற்றங்களைத் தொடர்ந்து அவதானித்துப் பிரதிமையை ஒப்பேற்ற முயற்சிப்பான். பிரதிமைக்குரியவனின் முகத்தில் சுவைத்தாக்கங்களால் ஏற்படும் மாறுதல்களைக் கூர்ந்து அவதானிக்கும் கண்களால் மனதிற்பதிய வைத்து பின் ஒன்று சேர்த்து அமைக்கக் கூடிய விவேகத்தகமை பெற்ற மூளையும் அதன் கட்டளைகளை ஏற்று இயங்கப் பயிற்சி பெற்ற கைகளையும் கொண்டு செயற்படுபவனே பிரதிமைக் கலையுலகில் முன்நிற்க முடியும். நேர் மாறானவனோ பல பொதுசன ஊடகங்களின் பிரசாரபலத்துடன் 'சாய' நீராடித் தன்னைப் பிரபலமாக்கி விடுகின்றான் என்பது கண்கூடு.

## ஓவியர் பக்கம்.....

### தலைகீழ் ஓவியம்




அருகே இருப்பவை ஜப்பானிய காட்டூன் ஓவியங்கள். இவைகளை இப்படியே வைத்துப் பார்த்தால் கொஞ்சம் கோரமான முகங்கள் தெரிகின்றன. ஆனால் இந்தப் படத்தை தலைகீழாக வைத்துப் பாருங்கள். இன்னும் கொஞ்சம் முகங்கள் தெரியும்....இதைவிடக் கோர....மாக..

நன்றி சுடரொளி - பெப்ரவரி 2004



Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.




Guru Printers, 56, Adiyapatham Road, Thirunelvely.